# சாத்தான்கள் வேதம் ஓதுகின்றன!

**வலதுசாரி:** நம்ம அமித்ஷாஜி பேச்சை கேட்டேளா? மனுஷன் என்னமா பேசினார்... பேஷ்... பேஷ்... அற்புதம் அபாரம் ...

**நடுநிலையாளர்:** எந்தப் பேச்சை சொல்றீங்க... அப்படி எதை அபாரம் என்று கூறுகிறீர்கள்?

**வலதுசாரி:** நம்ப பூமி... நம்ப ஜனம்னு பாதயாத்ரை போறாளோயில்லையோ... அத ஆரம்பிச்சு வைச்சு அவா பேசினதை நீர் கேட்கலையா?

**நடுநிலையாளர்:** அதிலே என்ன புதுசா பேசிட்டார்; எல்லாமே ஆறின கஞ்சிதானே! தமிழ்நாட்டுக்கு அமித்ஷா வந்தாலும் நட்டா வந்தாலும் ஒரே பாட்டைத்தானே பாடி வருகிறார்கள்.

**வலதுசாரி:** எதை ஒரே பேச்சு என்கிறேள்?

**நடுநிலையாளர்:** குடும்ப அரசியல்... வாரிசு அரசியல் என்கிறார்களே அதைத்தான்!

**வலதுசாரி:** நிஜந்தானே! சத்தியத்தைத்தானே பேசுறாள்... காங்கிரஸ்... தி.மு.க. அவாளோட கூட்டணிக்காரா எல்லாம் குடும்ப அரசியல்தானே நடத்திண்டு வர்றாள்...

**நடுநிலையாளர்: பா.ஜ.க.வில் உள்ள குடும்ப அரசியலை பலமுறை பட்டியல் போட்டுக் காட்டியும் அதுகுறித்து வாயையே திறப்பதில்லையே; அதற்கு பதில் கூறிவிட்டு பேசுவதுதானே யோக்யத்தனம்!**




**வலதுசாரி:** அவர் கூட்டணியில் எல்லாம் தோப்பனார்... பிள்ளையாண்டான்னு மந்திரி, எம்.எல்.ஏ.ன்னுதான் இருக்காளேதவிர யாரும் இவாளைப்போல கட்சியை தோப்பனாருக்குப் பிறகு பிள்ளையாண்டான் தான் தலைவர்னு ஆகிறது இல்லையே....

**நடுநிலையாளர் :** இப்படி எல்லாம் பேச உங்களுக்கு வெட்கமாகவே இல்லையா? முதலில் அப்பாவுக்குப் பிறகு பிள்ளைதான் சட்டமன்ற உறுப்பினராக ஆக வேண்டுமா? கட்சியில் வேறு ஆளே இல்லையா? - எனும் உங்கள் வழக்கமான சிண்டு முடியும் தனத்தைத் தொடங்குவீர்கள்...




**வலதுசாரி :** அதிலே என்ன தப்பு கண்டேள்... காங்கிரஸ், தி.மு.க., எல்லாத்துலேயும் அப்படித்தானே நடக்குது!

**நடுநிலையாளர் : பி. ஜே. பி. யில் உள்ள வாரிசுகள் பட்டியலை போட்டுக் காட்டினா... ஏன் அதற்கு பதில் சொல்லாம நவ துவாரங்களையும் மூடிக்கொள்கிறீர்கள்?**

**வலதுசாரி:** ஏன் பதில் சொல்றதில்லை... எங்கவா தீர்க்கமா பதில் சொல்றாளே; நீர் கேட்டதில்லையா?

**நடுநிலையாளர்:** அப்படியா?

**வலதுசாரி:** அவாள் குடும்ப அரசியல்ன்னு சொல்றது ராஜாங்கத்துல தோப்பனாருக்குப் பிறகு பிள்ளையாண்டான் பதவிக்கு வர்றது பத்தி இல்லே... கட்சியிலே வர்றாளே அதைப் பத்திதான்!

**நடுநிலையாளர்:** அவங்க கட்சி, அவங்க தொண்டர்கள் அவர்களுக்கு இல்லாத கவலை அமித்ஷா, மோடி, நட்டாவுக்கு ஏன் வருது?

**வலதுசாரி:** இதெல்லாம் ஜனநாயகத்துக்கு ஒத்துவராது இல்லையா?

**நடுநிலையாளர்:** "சாத்தான் வேதம் ஓதுகிறது" என்பார்களே; அதைப்போலத்தான் இருக்கிறது, பி.ஜே.பி. தலைவர்கள் பேச்சு

**வலதுசாரி:** யாரை... சாத்தான்னு சொல்றேள்...

**நடுநிலையாளர்:** மோடி, அமித்ஷா, நட்டா மற்றும் பி.ஜே.பி.க்கு வாதாடுற உங்களைப் போன்ற ஆளுங்களைத்தான்

**வலதுசாரி :** எதனாலே அப்படிச் சொல்றேள்...?

**நடுநிலையாளர்: உமது வாதப்படியே வருவோம்... கட்சியிலே அப்பாவுக்குப் பின்னால மகன் தலைமையா?**




**என்று கேட்கிறீர்கள்... அமித்ஷா பேசிய வாரிசு அரசியல், கட்சிகளுக்குத்தான் என்றால், அவர் பேசிய அந்தக் கூட்டத்தில் ஜி.கே.வாசன் அவருக்கு அருகில் உட்கார்ந்திருந்தாரே; மூப்பனார் துவக்கிய தமிழ் மாநில காங்கிரசின் தலைவர் தானே வாசன். வாசன், மூப்பனார் மகன் இல்லையா?**

அதைவிடும்... என்.டி.ஏ... கூட்டணியின் கூட்டம் டெல்லியில் நடந்ததே... நினைவிருக்கிறதா?

**வலதுசாரி:** என்ன கேலி பண்றேளா... 38 கட்சி சேர்ந்து நடத்தினாளே... அவ்வளவு சுலபமா அதை மறக்க முடியுமா?

**நடுநிலையாளர்:** ஆம்; அதே கூட்டம்தான்! மோடியை வரவேற்க அந்த அரங்கத்தின் வெளியே சிலர் காத்திருக்க, அரங்கத்தின் உள்ளே சில கட்சித் தலைவர்கள் கூடி நின்றனரே; அதைப் பார்த்தீர்களா?

**வலதுசாரி:** மோடி உள்ளே போறாள்... எல்லா கட்சித் தலைவர்களும் கும்பிட்டபடியே நிற்கிறாள்... மோடிஜியும் இரண்டு கரத்தையும் குவித்து நமஸ்காரம் கூறியபடியே அவாளிடத்திலே சென்றார்...

**நடுநிலையாளர்:** நன்றாக கவனித்துள்ளீர். எல்லா தலைவர்களும் வணங்கியபடியே மோடியை வரவேற்கின்றனர். அப்போது உங்கள் மோடிஜி என்ன செய்தார் கவனித்தீர்களா?

**வலதுசாரி:** என்ன செய்தார்?

**நடுநிலையாளர் : அவரை வரவேற்ற தலைவர்களில் முன்வரிசைகளில் இருந்தவர்கள் எல்லாரையும் விட்டுவிட்டு பின்வரிசையில் நின்ற ஒரு இளைஞரை அழைத்து கட்டிப்பிடித்து உச்சிமோந்தாரே; அதனைக் கண்டீரா? அந்த நிகழ்வைப் பார்த்த அத்தனைபேர் கண்களும், அங்கே இருந்த கட்சித் தலைவர்களும் கூட அதைப் பார்த்து திகைத்து நின்றதைப் பார்க்கவில்லையா?**

**வலதுசாரி:** பார்த்தேன்... பார்த்தேன்...யார்அந்தப்பிள்ளையாண்டான்? எல்லாரையும் விட்டுட்டு ஏன் அந்தப் பிள்ளையாண்டானை கூப்பிட்டு மோடி ஆலிங்கனம் செய்துள்ளார் என்று நேக்கே புரியவில்லை



**நடுநிலையாளர்:** அந்தப் பிள்ளையாண்டான் வேறு யாருமில்லை... லோக் ஜனசக்தி கட்சி என்று ஒன்று இந்தியாவில் இருந்ததே; அதாவது தெரியுமா?

**வலதுசாரி:** என்ன விளையாடுறேளா? 'ராம்விலாஸ் பஸ்வான் கட்சி'ன்னு நேக்குத் தெரியாதா என்ன?

**நடுநிலையாளர்:** அந்தக் கட்சி ராம்விலாஸ் பஸ்வான் மறைவுக்குப் பிறகு இரண்டா உடைஞ்ச கதை எல்லாம் தெரியுமா?


பஸ்வானின் மகனை பிரதமர் மோடி ஆலிங்கனம் செய்த போது...

**வலதுசாரி:** பஸ்வான் சகோதரனுக்கும் - பஸ்வானோட பிள்ளையாண்டானுக்கும் ஏதோ தகராறுன்னு அப்போ பேசிண்டாள்...

**நடுநிலையாளர்:** பேசிண்டாள் இல்லை; நடந்தது அதுதான்! பஸ்வான் ஆரம்பிச்ச கட்சி இரண்டாக உடைஞ்சுது; பஸ்வானின் மகன் சிராக் பஸ்வான் தலைமையிலான பிரிவுக்கு 'லோக் ஜனசக்தி பார்ட்டி' (ராம்விலாஸ்) என்றும்; பஸ்வானின் சகோதரர் பசுபதி பாரஸ் பிரிவுக்கு 'ராஷ்டிரிய லோக் ஜனசக்தி' என்றும் தங்களை அழைத்துக் கொள்ள தேர்தல் கமிஷன் அங்கீகாரம் அளித்தது. இதெல்லாம் உமக்குத் தெரியும் இல்லையா?

**வலதுசாரி :** அதனால் என்ன? அவாளுக்குள்ளே சண்டை போட்டு பிரிஞ்சு போயிட்டா...

**நடுநிலையாளர் : உண்மைதான்... அந்த ரெண்டு கட்சியுமே ராம்விலாஸ் பஸ்வானின் குடும்பத்தின் வாரிசுகளால் நடத்தப்படுகின்றன. லோக் ஜனசக்தி (பஸ்வான்) கட்சிக்கு தலைவர் சிராக் பஸ்வான்.**

இன்னொரு பிரிவான ராஷ்டிரிய லோக் ஜனசக்தி கட்சிக்கு தலைவர் பஸ்வானின் சகோதரர் பசுபதிகுமார் பாராஸ்! இதெல்லாம் உமக்குத் தெரியுமில்லையா?

**வலதுசாரி:** எதுக்கு இவ்வளோ வியாக்கியானம் ?

**நடுநிலையாளர்:** இந்தக் குடும்ப வாரிசு கட்சிகள் இரண்டுமே இப்போ எங்கேயிருக்கு தெரியுமா?

**வலதுசாரி :** என்ன சொல்லவர்றேள்...

**நடுநிலையாளர்:** இந்தியா (I.N.D.I.A.) அணியிலே குடும்ப அரசியல், வாரிசு அரசியல் நடத்துகிறவர்கள் இருக்கிறார்கள். அதனால அது ஜனநாயகத்துக்கே ஆபத்து என மோடி - அமித்ஷா - நட்டா எல்லாம் பேசுறாங்களே...

**வலதுசாரி:** அதிலே என்ன தவறு கண்டேள்...

**நடுநிலையாளர்: தவறு ஒன்றும் காணவில்லை! மூப்பனார் மகன் வாசன், மூப்பனாருக்குப் பிறகு தலைவராக இருக்கும் தமிழ் மாநில காங்கிரஸ், பஸ்வானின் மகன் சிராக் பஸ்வான், பஸ்வானின் சகோதரர் பசுபதிபாரஸ் தலைமையில் நடக்கும் கட்சிகளெல்லாம் இப்போது பா.ஜ.க.வின் தலைமையில் இயங்கும் என்.டி.ஏ.வில் இருக்கிறார்களே; எல்லா கட்சித் தலைவர்களையும் விட்டுவிட்டு கடைசி வரிசையில நின்ற சிராக் பஸ்வானை அழைத்து அணைத்துக் கொள்கிறாரே மோடி! அப்போ 'குடும்ப அரசியல், வாரிசு அரசியல் - அதனால் ஜனநாயகத்துக்கு ஆபத்து' என்று பேசுவதெல்லாம் எங்கே போயிற்று? பஸ்வான் மகன் கட்சி மற்றும் பஸ்வான் தம்பி கட்சி எல்லாமே என்.டி.ஏ.விலேதானே இருக்கு!**

**வலதுசாரி :**அவா எல்லாம் மோடிஜி 'கண்ட்ரோல்'ல இருக்கா... யாரை எங்க வைக்கணும்னு மோடிஜி, அமித்ஷாஜிக்குத் தெரியும்!

**நடுநிலையாளர் : பஸ்வான் சகோதரரை அமைச்சரவையிலேயே வச்சிருக்கார் என்பது உமக்குத் தெரியுமா? 'பிரம்மாவின் தலையிலே அவதரித்த அறிவுஜீவிகள் நாங்கள்தான்' என்று பேசித் திரியும் உங்களைப் போன்றோரால் நியாய தர்மம் மறந்து, பேசிட எப்படித்தான் முடிகிறதோ!**